விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 பங்குனி 21 றஜபு ஷஃபான் 4 இதழ் 51

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-4-1987

பருத்தித்துறை முகாமிலிருந்து

## ஏவப்பட்ட ஷெல்லினால் 18 அப்பாவிமக்கள் காயம்

(பருத்தித்துறை நிருபர்)

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் அதிகாலை ஏவப்பட்ட ஷெல்லுக்கு 18 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தோர் விபரம் எஸ். கைலாஸ் (வயது 27) எஸ்.செல்வராசா [வயது 20) கே. விஜிந்தன் (வயது 22) கே. முரளி [வயது 19) எம். விடுதலை [வயது 17) கே. இலங்காதேவி (வயது 28) கே. ரமேஸ் (வயது 25) எஸ். கிருஸ்ணபிள்ளை [வயது 56] எஸ். யோகம் [வயது 26] கே. வாசு (வயது 25) கே. விரேட் [வயது 20) எஸ். செல்வராசா (வயது 65) எஸ், சிவசுப்பிரமணியம் (வயது 77 கே. பெரியதுரை [வயது 80] எஸ். கெங்கா [வயது 1] வி. புஸ்ப

(5-ம் பக்கம்பார்க்க)

# ● முகாம்களிலிருந்து வெளியேறிய போது ஆனையிறவிலும், மன்னாரிலும் படையினருடன் புலிகள் சமர்

## சிப்பாய்கள் இருவர் பலி - பலர் காயம்

(ஒட்டுசுட்டான் மன்னார் நிருபர்கள்)

**இராணுவமுகாம்களிலிருந்து குடிமக்கள் வாழும் பகுதியை நோக்கி ஆனையிறவிலும் மன்னாரிலும் இராணுவத்தினர் வரமுயன்றபோது, நவீன ஆயுதங்கள் சகிதம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதலையடுத்து இழப்புக்களுடன் படையினர் முகாம் திரும்பினர்.**

**இந்தாக்குதலில் படையினர் தரப்பில் பலர் பலியானதுடன் காயமடைந்துமுள்ளனர்**

இச்சம்பவம் குறித்துமேலும் தெரிய வருவதாவது-

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இருபிரிவாக நேற்று காலை 8 மணிக்கு ஐநூறுக்கும் மேற்பட்ட ராணுவத்தினர் வெளியேறி மக்கள் வாழும் பகுதியை நோக்கி வர முற்பட்ட போது குறிஞ்சாத்தீவுக்கு அண்மையில் விடுதலைப் புலிகள் திடீர் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

படையினருக்கு பாதுகாப்பளிக்கும் வகையில் ஹெலிகாப்டர் ஒன்றும் ரோந்து சேவையில் ஈடுபட்டு தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமிருந்தது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சியை நோக்கி ஷெல் ஏவப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து காலையில் புறப்பட்டுச் சென்ற பயணிகளும் முந்நூறுக்கு மேற்பட்ட வாகனங்களும் பளையில் பல மணிநேரம் தரித்து நிற்க நேர்ந்தது. இதேபோல் ஆனையிறவு உப்பளத்திற்கு அண்மையிலும் யாழ். குடாநாட்டை நோக்கி வந்த வாகனங்களும் பல மணி நேரம் தரித்து நின்றன.

இத் தாக்குதலுக்கு அஞ்சி பெருமளவு இயக்கச்சி மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

இந்த நேரடி மோதலின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மேலும் முன்னேறமுடி

(8-ம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்து ஒருவர் பலி மற்றவர் காயம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். நகரில் நேற்று மாலை நடந்த பஸ் விபத்தில் ஒருவர் பலியானார். மற்றவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில், சிவன் கோவிலுக்கு முன்பாக, வ. பி. போ.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியில் பதுங்குகுழிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். போதனா வைத்தியசாலை வளவினுள்ளும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் 30-ம் திகதி இடம்பெற்ற இராணுவ 'ஷெல்' தாக்குதலின் போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் பலர் மரணமானதை அடுத்து ஷெல் தாக்குதல்களில் இருந்து நோயாளிகளைப் பாதுகாப்பதற்காக மேற்படி பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பதுங்கு குழிகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவ மாணவிகளினால் சிரமதான முறையில் அகைக்கப்பட்டு வருகிறது. (வா)

வல்லை சம்பவம்

## காயமடைந்தவர் மரணமானார்

யாழ்ப்பாணம், சனி

வல்லையில் நேற்று முன் தினம் அம்புலன்ஸ் மீது "ஹெலி" குண்டு வீசிய போது காயத்துடன் மீட்கப்பட்டு, யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சிவன் என்பவர் மரணமானார்.

(கு)

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறையில் நேற்று காலை ஹெலிகொப்டரிலிருந்து மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இன்பருட்டியை சேர்ந்த மதியழகன் (12 வயது) என்ற சிறுவன் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கு)

## மனிதஉரிமைமீறலைஎதிர்த்து யாழ்.செயலகவாசலில் சர்வ மதபிரார்த்தனை

(அலுவலக நிருபர்)

இந்நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை எதிர்த்தும், மனித உரிமைகளை நிலைபெறச் செய்வதற்கும் நிரந்தரமான நீதியான சமாதானத்தை நிலவச் செய்வதற்கும், கௌரவமானதும் சுதந்திரமானதுமான சுபீட்ச வாழ்வை ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பதற்கான ஆன்மீக பலத்தை வேண்டி நேற்றுக் காலை யாழ் செயலக முன்றலில் சர்வமதப் பிரார்த்தனை ஒன்று நடைபெற்றது. மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம், அன்னையர் முன்னணி ஆகியவற்றுடன் பிறபொது ஸ்தாபனங்களும்

(5-ம் பக்கம்பார்க்க)



யாழ்.செயலக முன்றலில் நேற்று இடம்பெற்ற சர்வமதப் பிரார்த்தனையின்போது கோவிந்தராஜ் அடிகள், யாழ். ஆசனச்கோவில் பங்குத்தந்தை வண ஜெபநேசன், மௌலவி எஸ். சதக்கத்துல்லா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் உரையாற்றுவதையும், துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படங்கள்: தேவா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பரந்தன் 3ம் வாய்க்காலில் பூங்காவனச்சந்திக்கு அருகாமையில் 15 ஏக்கர் நெற்காணி (இரண்டு போகம் செய்யக் கூடியது] உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: 37/3, சிவகுருநாதர் லேன், பிறவுன் ரோட், யாழ்ப்பாணம். சி-8359

புதிய குளிர்சாதனப் பெட்டிகள், கடை அலுமாரிகள், Show cases, தொட்டில், கிளாஸ்வகை, Floor Polisher, Gas and Electric Cooker, விருந்தைக் கதிரைகள், Suit case, மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமற்றி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. (சி- 8295)

யாழ்ப்பாணம், கொய்யாத் தோட்டத்தில் நல்ல சுற்றுடலில் புதியவீடு, நன்னீர்க் கிணறு, கடை, மற்றும் சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். க. சுந்தரலிங்கம், இல. 15/2 [39/5] புதுவீதி, கொய்யாத் தோட்டம். சி-8356

Hy-Line (ஹை-லைன் வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் முழுப்பணம் செலுத்தி 1 வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். விலை 15/- சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி 8269]

விற்பனைக்கு அசல் நிலையில் ரோனியோ மெஷின், Gestetner கம்பனிபராமரிப்பு. தொடர்பு: 13, நவீன சந்தை, மேல் மாடி, யாழ்ப்பாணம். சி-8408

Typewriters- புதிய ரெமிங்டன் Portable, மற்றும், Olympia, Underwood தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. Fudo Enterprises, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். (Bank of Ceylon- Bitsman அருகாமையில்.) (சி-8405)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சதாசிவம் சுந்தரம்

தோற்றம்: 12-04-1896

மறைவு: 16-03-1986

திதி: 04-04-1987

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு ஆகியும் எங்கள் உள்ளத்தில் நிலையாய் நிற்கும் உங்கள் அன்பு என்றும் மறையாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இருபாலை,
கோப்பாய். (சி 8384)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. மாலினி பாம், 87, இராமநாதன் ரோட், யாழ்ப்பாணம். சி-8406

Nallur Farm Centreஇல் முதல் தரமான அரைத்த சோளன், சோயா, மீன்தூள்மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மே/பா நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். சி-8182

நல்ல நிலையிலுள்ள C.B 125 Twin Honda, Vespha ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு தொடர்பு: சருசேது சேவிஸ், K K S ரோட், சுன்னாகம். சி-8400

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, மே/பா நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். சி-8378

Expeller Poonac பசு மாட்டுக்கு சிறந்த முதல்தரமான பிண்ணாக்கு எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre, மே/பா நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். சி-8383

வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு இறைச்சிக் கோழிகள் (Broilers) விலையினைக் குறைத்துள்ளோம். 1 கிலோ ரூபா 42/- வீதம் தேவையான அளவில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். நல்ல இனப்பன்றிகளும், பன்றிக் குட்டிகளும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அண்ணுபாம், இணுவில். ஏ-3908

பலவித வீட்டுத்தளபாடங்கள், பெரிய சிறிய அலுமாரிகள், Show case, கண்ணாடி மேசைகள், கபேட், Typewriter T V Stand, Pressure Cooker, Flask, Spring Beds, பித்தளை தூக்குலாம்புகள், விளக்குகள், எவர்சில்வர் பொருட்கள், கிளாஸ் வகைகள், சிங்கர் தையல்மெஷின், கசற்றேடியோக்கள், எழுதுமேசைகள், Water pump, Oven. ஹோல் செற், சாப்பாட்டு மேசைகள், மற்றும் பல. எம். தியாகராஜன், 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். சி-8398

கோயில்களுக்குத் தேவையான பெரியமணி, செப்பு பித்தளை கிடாரம், குத்துவிளக்கு, திருவாசி, பூச்சாடி, மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், இறக்குமதிசெய்யப்பட்ட சில்வர்றே, செம்பு, குடம் றைஸ் பிளேற், கறிடிஸ், ரம்ளர்ஸ், கரண்டி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு. Honda C. D. 125, C. D. 90, C. B. 50 றக்கூன் சாளி என்பனவும் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ், 26 B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-8360

## கல்வி

இந்தியக்கல்லூரிகளில் 6, 7, 8, 9, 10, 1, 2 வகுப்புகளில் [ஆங்கில மொழியில்] சேர விரும்புவோர் எம்முடன் 30-04-87க்கு முன் தொடர்பு கொள்ளவும்: "ஹரிஹரன் என்டபிறைஸ்", 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. சி-8404

## தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம், நீர் முதலிய வசதிகளோடு நான்கு அறைகளுக்குக் குறையாத வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல.சி8372 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-8372

## வகுப்புக்கள்

பிரத்தியேக தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பமாகின்றன. 4-4-87 சனிக்கிழமை பி. ப. 2 மணி இராஜஸ்தான் தபால் கந்தோரடி, நெல்லியடி. சி-8174

A/L 88 89 கலை, வர்த்தகம் விஞ்ஞானம் O/L பகல் நேர வகுப்புக்கள், Spoken English Class தமிழ், ஆங்கிலம், தட்டச்சு, சுருக்கெழுத்து சித்திரை 16 ம் திகதி வரை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். பிறிலியன் அக்கடமி, நெல்லியடி. சி-8211

### பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி.

பாவித்த சிட்டைகள் வடிவங்கள்

### கேள்வி கோரல்

மேற்படி ப. நோ. கூ. சங்கத்தில் பாவிக்கப்பட்ட படிவங்கள் சிட்டை புத்தகங்கள் கேள்வி கோரல் மூலம் விற்பனைக்கு உள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதி 30-4-87. மேற்படி காகிதாதிகளை பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி.
(எ-3912)

### சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச்சாக்கு விற்பனை

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 3500 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு இருக்கின்றன. கொள்வனவுசெய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 300ம், கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தில் பெற்று கேள்விப்பத்திரப் படிவத்தில் மெழுகுமுத்திரையிட்ட கடித உறையில் சாக்குக் கேள்விப் பத்திரம் என எழுதப்பட்டு 11-4-87 சனிக்கிழமை காலை 10 மணிக்குமுன் கிடைக்கக் கூடியதாக சங்கத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படவேண்டும்

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி. (எ 3911)

### பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த அப்பாஸ் முகம்மது லத்தீப் பெண் புஸ்பராணி [அருணாசலம் ஏகாம்பரம்மகள் புஸ்பராணி] ஆகிய நான் எனது பெயரை அப்பாஸ் முகம்மது லத்தீப் பெண் நயிமா என மாற்றியுள்ளேன் என்றும், 1980ம் ஆண்டு ஐப்பசிமாதம் 05ந் திகதி தொடக்கம் சகல ஆவணங்களிலும் அப்பாஸ் முகமது லத்தீப் பெண் நயிமா என்றே கையெழுத்து இட்டு வருகின்றேன் என்றும், இவ் அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துகிறேன்.

ல. நயிமா.
சி-8401

கிராம ரீதியில்

## பனை அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை பெற நடவடிக்கை

மண்டைதீவு, வியாழன் கிராம மட்டத்திலிருந்து பனை உற்பத்தி தொடர்பான அபிவிருத்தி ஆலோசனைகளையும், புதிய தயாரிப்பில் உள்ள பனை உற்பத்திப் பொருட்களையும் பனை உணவுப் பொருட்களையும் பாவனைக்கும் விற்பனைக்கும் அறிமுகப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை சனசமூக நிலையங்களுக்கு ஊடாகப் பெறுவதற்கான ஏற்பாடுகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண் (7-ம் பக்கம் பார்க்க)

### வேண்டுகோள்

யாழ். நகரில் 28 03-87 சனிக்கிழமை மத்தியானம் 'ஷெல்' விழுந்தபோது உண்டான கலவரத்தில் BB3610 இலக்கமுடைய எனது துவிச்சக்கரவண்டி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வீடியோ புளொசம்ஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் தரப்படும்.

தேவராசா,
மயிலன் பேக்கரி,
[சி-8402] வியாபாரிமூலை, பருத்தித்துறை.

## பிரயாண ஒழுங்கு

மாலைதீவு விடயமாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

**S. V. அப்புத்துரை**

நந்தாவில் லேன், கொக்குவில்.
[சி-8397]

JAFFNA COLLEGE
TECHNICAL INSTITUTE
VADDUKODDAI.

## மனை நிர்மாண தொழிற்பயிற்சி சான்றிதழ் நெறிகள்

நோர்வே நாட்டின் நிதி உதவியுடன் எமது இளைஞர்களுக்கு இலவசபயிற்சி வகுப்புகள் அளிக்கப்படுகின்றன.

மேசன் வேலை
மரவேலை ] 5 மாத பயிற்சி

21 வயதுக்குட்பட்ட சகலரும் விண்ணப்பிக்கலாம். ஒழுங்கான பயிலுனர்க்கு நாளாந்த ஊக்குவிப்புப்படி ரூபா 10/- வழங்கப்படும். உடனே விண்ணப்பித்து நேரில் வரவும்.

பணிப்பாளர்.

(எ-3907)

RESIDENTIAL MEDICAL OFFICER

## WANTED

### வதிவிட வைத்திய அதிகாரி தேவை

தெல்லிப்பழையில் அண்மையில் பொறுப்பேற்கப்பட்ட சமூக சுகாதார சேவைகள் வைத்தியசாலைக்கு [Community Health Services Hospital] வதிவிடவைத்திய அதிகாரி தேவைப்படுகிறார். தராதரங்கள், சேவை அனுபவம், முதலிய விபரங்களுடன் எதிர்பார்க்கும் வேதனத்தையும் குறிப்பிட்டு 10-04-1987க்குமுன் விண்ணப்பிக்கவும்.

துர்க்காபுரம், தலைவர்
தெல்லிப்பழை. சமூக சுகாதார சேவைகள்
02-04-1987. வைத்தியசாலை,
[சி-8387]

## ROCK ENGINEERS & CONTRACTORS

### குழாய்க் கிணறுகள்
(மெஷின்கள் மூலம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் எந்த இடத்திலாவது சரி குறைந்த நேரத்தில் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் அமைத்துதருவோம்.

குறிப்பு;- குழாய்க்கிணறு அமைப்பதற்கு இதுவரை கஷ்டமாகஇருந்த இடங்களாகிய நுணாவில், சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், கச்சாய், அல்லாரை, குடமியன், மிருசுவில் போன்ற இடங்களிலும் காவிநீரை அகற்றி நல்லநீரை பெற்றுக்கொடுத்துள்ளோம்.

தொடர்பு:-

**றொக் எஞ்ஜினியர்ஸ்**

பருத்தித்துறை வீதி. கோப்பாய்.
[சி-8363]

## நெடுஞ்சாலைகள், பாலங்கள் போடமறுத்த

# அதிபர் றீகனுக்கு அமெரிக்க காங்கிரஸில்பலத்ததோல்வி!

வாஷிங்டன், ஏப்ரல் 3

**அமெரிக்க காங்கிரஸில் (பாராளுமன்றில்) அதிபர் றெனல்ட் றீகனுக்கு பாரிய தோல்வியொன்று ஏற்பட்டுள்ளது. இத் தோல்வி அவரது அரசியல்வாழ்வில் கிடைத்த ஒரு பலத்த அடி என்று தெரிவிக்கப்பட்டது. திரு. றீகனின் கட்சிக்காரர்களான குடியரசுக்கட்சி உறுப்பினர்களும் அவருக்கெதிராக வாக்களித்திருப்பது ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது.**

அமெரிக்காவிலுள்ள நெடுஞ்சாலைகளைப் புனரமைக்கவும், புதிய வீதிகளைப் போடவும், பாலங்களை திருத்தவும், புதியனவற்றை அமைக்கவும் அமெரிக்க காங்கிரஸில் நிதி ஒதுக்கீடு செய்யுமபடி கேட்கப்பட்டது,

30 ஆயிரம் மில்லியன் டாலர்களை இதற்கென ஒதுக்கும்படி காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனல் இத் தொகை மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு மிதமிஞ்சியதாகும் என தெரிவித்து இத் தொகையை அங்கீகரிக்க அதிபர் றீகன் மறுத்தார்.

தமது வீட்டோ அதிகாரத்தை உபயோகித்து தமது



நிராகரிப்பையும் செல்லுபடியாக்க முற்பட்டார்.

ஆனல் அமெரிக்க காங்கிரஸின் செனட், மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டும் கூட்டாக திரு. றீகனுக்கு எதிராக வாக்களித்தன. இதனல் அவரது 'வீட்டோ' பிரயோகமும் செயலிழந்தது.

இந்த இரு சபைகளினதும் வாக்களிப்பில் திரு. றீகனின் கட்சியான குடியரசுக்கட்சியைச் சேர்ந்த 16 உறுப்பினர்களும் அவருக்கெதிராக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அந்த குடியரசுக்கட்சி உறுப்பினர்கள் கருத்து வெளியிடுகையில், "திரு. றீகன் இனிமேல்தேர்தலில் போட்டியிடமாட்டார். ஆனல் நாம் போட்டியிட விருப்பவர்கள். எனவே நாம் சில நல்ல முயற்சிகளை ஆதரிக்கவேண்டும்'' என்றனர்.

## அச்சுவேலி வைத்தியசாலைக்கு 'அம்புலன்ஸ்' தேவை

பலாலி வெள்ளி

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்று தேவை என அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்கம் யாழ் சுகாதார சேவை பணிப்பாளரை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

தற்பொழுது இராணுவத்தினர் நடமாட்டமும் ஷெல் தாக்குதலும் பொம்மர், ஹெலிகொப்டர் தாக்குதலும் தொண்டமானறு, தோலகட்டி, வசாவிளான் பகுதிகளில் அடிக்கடி நிகழ்வதால் இச்சம்பவங்களில் காயப்படுவோர்கள் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு வரபடுகின்றனர். இவ் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் அதிகமான நோயாளர் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும்நிலை ஏற்படுகிறது. இதற்கு அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அன்புலன்ஸ் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரி மீதான ஷெல் தாக்குதல்:

# "பகிரங்க நீதி விசாரணையை அரசு நடத்தவேண்டும்"

### மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் கோட்டை இராணுவத்தினரால் யாழ் அரசினர் ஆஸ்பத்திரி தாக்கப்பட்ட சம்பவம் குறித்து அரசு உடனடியாகபகிரங்கநீதி விசாரணை நடாத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் கோரியுள்ளது. இது தொடர்பாக மேற்படி இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து அண்மைக் காலமாக ஏவப்படும் ஷெல்களினல் பாடசாலைகள் ஆலயங்கள் என்பனவற்றுடன் அதன் உச்சக் கட்டமாக யாழ் ஆஸ்பத்திரியும் தாக்கப்பட்டுள்ளது இதனல் ஆஸ்பத்திரி ஊழியர் உட்படஒன்பதுபேர்கொல்லப்பட்டும்பலர் காயமடைந்துமுள்ளனர். இதனல் கணப்பொழுதில் ஆஸ்பத்திரி சவச்சாலையாக மாறியது. இது அரச இராணுவத்தின் கையாலாகாத் தனமென்பதுடன் சர்வதேச யுத்த மரபுகளை மீறிய செயலாகும். இச் சம்பவங்கள் தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் உயிர் வாழும் உரிமைகளையே மறுப்பதுடன் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் 3-ம் பிரிவுக்கு மாறன செயலாகும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கெதிரான பல்வேறு வெகுஜன அமைப்புக்களும் அடிக்கடி அரசிடம் முறையிட்டும் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கிறது. இந் நாட்டிலுள்ள மனித உரிமைகளை நேசிக்கும் சக்திகள், தமிழ் மக்களுக்கு உயிர்வாழும் உரிமை உட்பட சகல மனித உரிமைகளும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டுமென்று பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரலெழுப்பத் தவறியதையிட்டு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வருந்துகின்றது. செஞ்சிலுவைச் சங்கம் இத் தாக்குதல் பற்றி நேரடியாக வந்து பார்வையிட வேண்டும். அதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டும்''.

## ஸிம்பாப்வே பாராளுமன்றத்தில் முன்னள் பிரதமருக்கு தடை!

ஹராரே, ஏப் 3

றொடீஸியா என்று அழைக்கப்பட்ட ஸிம்பாப்வேயின் முன்னள் பிரதமரான திரு. இயன் ஸ்மித் ஸிப்பாப்வே பாராளுமன்றத்திற்கு சமூகமளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது.

இத் தடை ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும். முன்னள் பிரதமர் திரு. இயன் ஸ்மித் தென்னபிரிக்கா மீதான தடையை நீக்கும்படி கோரியதையடுத்தே பாராளுமன்றிலிருந்து நீக்கப்பட்டார்.

திரு. ஸ்மித் இது குறித்து கருத்து வெளியிடுகையில், தென்னபிரிக்காவின் இன ஒடுக்கல் கொள்கையை தாம் ஆதரிக்கவில்லை என்றும், ஆனல் அந் நாட்டின் மீதான பொருளாதாரத் தடை ஸிம்பாப்வேயைப் பெரிதும் பாதிக்கும் எனத் தெரிவித்தார்:

ஆனல் ஸிம்பாப்வே அரசு அவரின் இக் கருத்தை ஏற்க மறுத்து எதிர்க்கட்சி உறுப்பினரான அவரை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றியது.

## இனப்பிரச்னைக்கு தீர்வுகாண

# "தமிழ்மக்களுக்கு அதிகபட்ச சுயாட்சி வழங்கவேண்டும்"

### இந்திய கம்.கட்சி அரசியல் குழு உறுப்பினர்

கொழும்பு வியா

"இலங்கை இனப்பிரச்னை தமிழ்மக்களுக்கு அதிகபட்ச சுயாட்சி வழங்குவதன்மூலமே தீர்க்கப்படலாம் தமிழ்ப் போராளிகளுக்கும் ஸ்ரீலங்கா ராணுவத்திற்கு மிடையேயான மோதல்கள்முடிவுக்குக்'' கொண்டுவரப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் 13-வது மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றபோது அதில் உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் கேரள எம். பி. யுமான திரு. எஸ். பல்ராம் தெரிவித்தார்

திரு. பல்ராம் தமதுரையின் போது இலங்கைச் சிக்கலைத் தீர்க்க சமாதன வழியாலேயே முடியுமென்பதை வலியுறுத்தினர்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், "83ம் ஆண்டு முதல் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர் பிரச்னை இரு நாடுகளிடையேயும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. இலங்கையை இந்தியா தாக்கும் என்ற அச்சம் வரத்தேவையில்லை. மாறக இந்தியாவின் தென்புற எல்லையில்தன்னுடன் நட்புறவுள்ள இலங்கை இருப்பதையே இந்தியா விரும்புகிறது. இந்தியாவுக்கு அதன் தென்புறத்தில் பாதுகாப்பு அபாயங்கள் தோன்றக்கூடாது'' எனக்கூறினர்.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஐக்கிய இலங்கை என்ற கட்டுக்கோப்பினுள்

(7-ம் பக்கம் பார்க்க)

## சிலிநாட்டில்பாப்பரசரின்பொதுக்கூட்டத்தில்

# பொலிஸார்- மக்கள் மோதல்!

சந்தியாகோ, ஏப்ரல் 3

சிலி நாட்டில் பரிசுத்த பாப்பரசர் பங்குபற்றிய பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்றில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

சிலியின் தலைநகரான சந்தியாகோவில் இக் கூட்டம் இடம்பெற்றது.

சர்வாதிகார நாடான சிலியில் மீண்டும் ஜனநாயகம் ஏற்படவேண்டுமென பாப்பரசர் இக் கூட்டத்தில் தெரிவித்தார் கூட்டத்தவரும் பாப்பரசரின் இவ் வேண்டுகோளை வரவேற்றனர். தொடர்ந்து கட்டுமீறிய சனத்திரளை அடக்கமுயன்ற பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

பாப்பரசர் சிலிநாட்டதிபர் பினேச்சேயுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். அத்துடன் சிலிநாட்டு கத்தோலிக்க ஆயர்களையும் அவர் சந்தித்து உரையாடினர்.

தென் அமெரிக்க கண்டத்தில் சிலி ஒரு பிரதான கத்தோலிக்க நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில்

# குடிசை வாசிகளுக்கு பிளாஸ்டிக் வாளிகள்!

சென்னை, ஏப்ரல் 3

சென்னை நகரின் சேரிப்புறங்களிலுள்ள ஒரு லட்சத்து 79 ஆயிரம் குடிசைவாசிகளுக்கு பிளாஸ்டிக் வாளிகளை வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் நிலவும் குடிநீர் தட்டுப்பாடு காரணமாக வாளிகளில் தண்ணீரை பிடித்து வைத்திருக்கும்வகையிலேயே இந்த உதவி வழங்கப்படுகின்றது.

இதேவேளை தமிழகத்தில் தற்போது நிலவும் பலத்த குடிநீர்ப் பிரச்னையை நீக்கும் வகையில் தமிழக அரசு தீவிர நிவாரணப்பணிகளை மேற்கொண்டுவருகிறது.

சென்னை நகருக்கு தினமும் வழங்கப்படும் 4 கோடியே 20 லட்சம் கலன் குடிநீர் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## இவர்களுக்கு

# யாழ். செயலகத்தில் ஒய்வூதியம் வழங்குவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கோட்டை இலங்கை வங்கியில் ஓய்வூதியம் பெறும் கச்சேரி இலங்கை வங்கி ஓய்யூதியக்காரர்களுக்கான மார்ச் ஏப்பிரல் மாதஓய்வூதியக்காசோலைகொடுப்பனவு இம்மாதம்8ம்திகதிமுதல் 10ம் திகதி வரை யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

ஓய்வூதியக் காசோலைகளைப் பெற்றுக்கொள்ள வருபவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டை ஓய்வூதிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் தாம் ஆரம்பித்துள்ள வங்கிக்கணக்கு இலக்கம், வங்கியின் பெயர், ஓய்வூதியக்காரர் பெயர், இலக்கம் ஆகியன குறித்து எழுதப்பட்ட கடிதத்தையும் கொண்டு செல்லவேண்டும்.

இக்கடிதம் கொண்டுசெல்பவர்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், வண்ணர்

(7-ம் பக்கம் பார்க்க)

## சேவைக்கால கல்வி ஆலோசகர்

(அச்சுவேலி, நிருபர்)

யாழ். மாவட்ட பாடசாலைகளின் தொழில்நுட்ப பாடத் துறைகளிற்கான சேவைக்கால கல்வி ஆலோசகர்களாக நியமனம் பெற்றோர் விபரம் வருமாறு:

விவசாயப் பாடநெறிக்கான சேவைக்கால கல்வி ஆலோசகர் கே. இரத்தினசிங்கம், புங்குடுதீவு, வேலணைக் கல்விவட்டாரம், ஏ. சண்முகநாதன் சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை கல்விவட்டாரம், திருமதி என். துரைராசா யாழ்பாணம், நல்லூர் கல்வி வட்டாரம், கே. செல்வக்குமார், மானிப்பாய், வட்டுக்கோட்டை கல்வி வட்டாரம். எஸ். கயிலைமகான் காங்கேசன்துறை, சுன்னாகம்... ...காப்பாய் கல்விவட்டாரம்,

மனையியல் பாடநெறிக்கான சேவைக்கால கல்வி ஆலோசகர் திருமதி கே. திருஞானசம்பந்தர் சாவகச்சேரி, நல்லூர் கல்வி வட்டாரம். திருமதி

(7-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன் —குறள்

[எந்த எந்த பொருளினிடத்து இருந்தும் பற்றை விட்டு நீங்கினவன், அந்த அந்தப் பொருளால் வரும் துன்பத்தினின்றும் நீங்கியவனுகிருன்.]

## நமது நோக்கு

# பாம்பின் குட்டி பாம்பு

'பக்கத்தில்
இருப்பவனே
பகைவன் ஆவான்
பாவியவன் பிறக்காமல்
இருந்திருந்தால்
மிகநலமாயிருக்கும்
ஆனல் என்ன
வேதனைக்கோ என்னருகில் அமர்ந்தான்''.
என்ருர்.

பெரியவெள்ளி நெருங்கி வரும் வேளையில் அதனை நினைவூட்டும் சம்பவங்கள் எங்கள் மத்தியில் பல நடைபெறுகின்றன.

இயேசு காவியத்தில் காணப்படும் மேற்கூறிய வரிகள் இயேசுபிரான், யூதாஸ் பற்றிச் சொல்லப்பட்டவை. "தின்றவன்தான் சுவையறிவான்'' யூதாஸ், இயேசு செப்பியதன் உட்கருத்தைப் புரிந்து கொண்டான் என்றும் காவியம் கூறுகிறது.

உலக அரங்கிலும், எங்கள் நாட்டிலும் 'என்னேடும் உண்பவனே என்மேல் பாய்ந்தான்'' என்ற மறைவாக்கு நன்ருகப்பலிக்கிறது.

ஒரு நாட்டின் முக்கிய மாநிலத்தின் தலைமை ஆஸ்பத்திரி அந்நாட்டின் இராணுவம் தாக்கிய செய்தி தலைநகரில் இன்னும் தெளிவாகத் தெரியாதிருத்தல் எத்தகைய அரசியல் வஞ்சனை என்பதை உலகறியும்.

இந்த நிலையில் அதற்கடுத்தாற்போல், வல்லையில் 'ஹெலி'க்குண்டு; நோயாளிகள், சாரதி, அம்புலன்ஸ் வண்டி அனைத்தையும் சாம்பராக்கிவிட்டது இன்னெரு வகையான வஞ்சனையென்று கருதவேண்டியிருக்கிறது. இதற்கொரு யூதாஸ் பொறுப்பாயிருக்கலாம்.

ஆங்கிலப் பேச்சு வழக்கில் 'take for a ride' என்ெருரு சொல்லோவியம் உண்டு. எந்தக் கபடத்தையும் ஏமாற்று வித்தையையும் குறிப்பதே இச்சொற்ெருடர்.

உலகில் மூன்று கேந்திரங்களில் உள்ள 'மூவேந்தர்' இன்று பலரை பல நாடுகளை 'இத்தகைய றைட்டுக்கு' அழைத்துச்செல்கின்றனர்.

அமெரிக்க ஜனதிபதி றீகன் இரண்டாவது யுத்தத்தின் பின் நாடு கண்ட பெருந் தலைவர் என்ற மதிப்டப் போய், அவருடைய திட்டங்கள் அனைத்திலும் மக்கள் சந்தேகம் உருவாகின்றது. பாராளுமன்ற ஆட்சியில், றீகனுக்கெதிரான அறிக்கை அவருடைய ராஜினமாவை வேண்டி நிற்கும். அமெரிக்க ஜனதிபதி ஆட்சி வேறுபட்டது.

சோவியத் ரஷ்யாவின் துடுக்கை அடக்குவதே தம்முடைய பெருநோக்கமென்று பறைசாற்றும் றீகன் பாகிஸ்தானுக்கு அளிக்கும் பாரிய இராணுவ உதவிகள் ஆப்கான் போரை எதிர்க்கவென்பது வெளி விளக்கம்.

பாகிஸ்தான் ஒரு அணு ஆயுத நாடாகி வருவதை நன்கறிந்தும் கொள்கைக்கு மாருக அதற்குதவுவது இந்தியாவின் அரசியல் ஸ்திரத்தைநிலைகுலைக்கவே என்பதைப் பலர் அறியார்.

இப் பெருந் தலைவரின் போக்கினுக்குப் போட்டியானவர் பாகிஸ்தான் அதிபர் ஸியா. எதற்கும் எங்கும் சிரித்தமுகத்துடன் 'ஆமா' சொல்லும் ஜெனரல் இவரைப்போல காண்பதரிது இருபெரும் வல்லரசுகளைத் தமது வாசாலப் பேச்சாலும், தந்திர உபாயங்களாலும் தம்மிடச் செய்கிருர்.

ஆப்கான்போரைச்சாட்டி அமெரிக்க உதவியையும், அதன் ஆதரவைக்காட்டி; ரஷ்யாவையும் — இவ்விரு நாடுகளையும் ஒரே சவாரியில் கொண்டு செல்கின்ருர் ஸியா. இதற்கு இந்தியா பலியாகும் சந்தர்ப்பம் இருந்தது, இன்று அது ஓரளவுக்கு நீங்கிவிட்டதெனலாம்.

சிறுநாடானலும், ஒரு பெருந்தலைவர் ஆட்சி, அதுவும் ஜனதிபதி ஆட்சி முறையில் இருப்பதால் றீகனையும், ஸியாவையும் ஒதுக்கவல்ல அரசியல் சாணக்கியம் நிறைந்தவர் ஜே. ஆர்.

இம் மும்மூர்த்திகள் தத்தம் பிரச்னைகளை - அதுவும் தீராதபிரச்னைகளை தம் ஆட்சிச்கு ஆயுள்அளிக்கும் வகையில் அவற்றை வேண்டியவாறு வளர்த்தும், கட்டுப்படுத்தியும் வருகின்றனர்.

அது, எவ்வாறென்பதை விளக்கவே நாம் அந்த ஆங்கில சொல்ஓவியத்தை நாடினேம்.

தமது அமைச்சர், தமது கட்சி, தமது மக்கள், தம்முடைய நேசநாடுகள் அனைத்தையும் திரட்டியும், உருட்டியும், வெருட்டியும், ஆட்சி நடத்தும் ஆற்றல் பெற்றவர்கள். சங்கடமான விடயங்களைக் கையாளும் உத்திகள் சாதாரண தலைவர்கள் கனவிலும் காணமுடியாதவை.

நாகத்தின் ஞானம்பெற்ற அரசியல் தலைவர்கள் அடுத்துக்கெடுப்பது அவசியமானல் அகற்குத் தயங்கார். அவர்களின் ஆட்சியில் இயங்கும் சாதனங்கள் அனைத்தும் அவர்களின் திறமையைப் பிரதிபலிப்பனவே!

இந்தியாவின் பரந்த அரசியல் ஞானம், இவ்வித 'பயணத்திற்கு' (ride) பலியாவதை நாம் பார்க்கமுடிகிறது. தலையடியைவிடவேறெவ்வகையிலும் இதற்கு மாற்றுமருந்தில்லை.

### அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், சனி

மறவன்புலோ கைதடி நாவற்குழி கள்ளிதிடற்பதி கல்யாணவேலவர் ஆலய அலங்கார் திருவிழா இன்று 4ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். கடைசி தினமான 13ம் திகதியன்று பகல் சங்காபிஷேகம், அன்னதானம் என்பன நடைபெற்று மாலை திருக்கல்யாணத் திருவிழாவும் நிகழும். (ப)

# இலங்கை கண் தானம்

# பாக். ஆயுத தானம்!

இலங்கையிலிருந்து கொண்டுபோன சில கண்களை பிரதமர் பிரேமதாஸா பாகிஸ்தான் பிரதமரிடம் அன்பளிப்புச் செய்தார்.

பாகிஸ்தானில் கண்ணில்லாத பலருக்கு இந்த இலங்கைக்கண்களின்மூலம் பார்வை கிடைக்கும் என்று நம்புகிருர்கள். கண்கள் என்று கூறும் போது 1971-ம் ஆண்டு பங்களாதேஷ் போராட்டம் நடந்தபோது பங்களாதேஷ் பொதுமக்கள் பலரது கண்களை பாகிஸ்தான் படையினர் குருடாக்கியதாக வெளிவந்த செய்திகள் பலருக்கு நினைவு வரலாம். ஒரு டாக்டரின் கண்களைக் குத்திக் குருடாக்கி பிய்த்து எடுத்தார்கள் என்று அந்தக்காலத்தில் செய்திகள் வெளிவந்தன. பாக் படையினர் செய்த அட்டூழியம் அது.

அதேபோல் 1983 ம் ஆண்டு இங்கு நடந்தேறிய இனக்கலவரங்களின்போது வெலிக்கடைச் சிறையில்வைத்து தமிழ்க் கைதிகளின் கண்களைக் குத்திக்கிழித்து அபிஷேகம் செய்யப்பட்ட கதையெல்லாம் நினைக்கு வரலாம்.

இது அப்படியல்ல நட்பின் பேரால் கொடுக்கப்படும் கண்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் ஆயுதப்படையினர் மேற்கொண்டுவரும்நடவடிக்கைக்கு 10 லட்சம் டாலர் பெறுமதியான ஆயுதங்களை கொடுக்க உதவ பாகிஸ்தான் ஏற்கனவே முன்வந்துள்ளது தெரிந்ததே. இலங்கை ஆயுதப்படையினருக்கு அங்கு பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

அதற்குப் பிரதியுபகாரமாகத்தான் இந்தக்கண்கள் பரிசளிக்கப்படுகின்றனவென்று கருதுவது சரியல்ல. இதுகண் தானம்! அது ஆயுதத்தானம்!? தமிழர் வழங்குவது உயிர்த் தானம்.

இந்த ஆயுதங்கள் பாகிஸ்தானின் தற்காப்புக்கென அமெரிக்கா கொடுத்தவை. அவைகள் பழுதாய்ப்போனதால் அல்லது தங்களுக்கு அதைவிட நவீன ஆயுதங்கள் கிடைக்கவிருப்பதால் இலங்கைக்கு விற்றுவிட பாகிஸ்தான் முன்வந்துள்ளது

பாகிஷ்தானிடமிருந்துமட்டுமல்ல ஏற்கனவே சீனவிடமிருந்தும் பீரங்கிப் படகுகளும் சிலரக விமானங்களும் தருவிக்கப்பட்டுள்ளன. மேலும் பலவிதமான ஆயுதப் பேரங்களும் நடைபெற்று வருகின்றன.

பங்களாதேஷிடமிருந்து ஆயுதங்கள் பெற முடியாவிட்டாலும் இந்தியாவுடன் பிணக்குகள் உள்ள நாடு என்ற முறையில் நட்பை நன்கு வளர்த்துக் கொள்ள பெரு முயற்சி எடுக்கப்படுகின்றது.

இவ்வாறு இந்தியாவுக்கு மாற்றுக் கருத்துள்ள நாடுகளையெல்லாம் நெருங்கிய நண்பர்களாக ஆக்கிக் கொள்வது இன்றைய அரசின் கொள்கைக்குப் பொருத்தம் தான்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் கொள்கை அனுசரணையாக இருக்கும் வரையில் இலங்கையின் தற்போதைய இக்கொள்கையில்மாற்றம் ஏற்படப் போவதில்லை

### புதிதல்ல

இலங்கை அரசு இப்படியான ஒரு கொள்கையைப் பின்பற்றுவது புதுமையல்ல. ஏற்கனவே இலங்கை இந்தியர்விடயத்தில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பதவியில் இருந்த காலத்தில் அவரை நெருக்கும் பொருட்டு திருமதி சிறிமா அம்மையார் சீனவுடன்நெருங்கிய உறவினை ஏற்படுத்திக் கொண்டு காரியமாற்றியுள்ளார்.

அதைவிட சோழ சாம்ராஜ்யம் தழைத்து ஓங்கிய காலத்திலும்கூட இலங்கையில் அவர்களின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மட்டுமன்றி இந்தியாவிலும் பூசல்களை ஏற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார்கள் சிங்கள அரசர்கள். இவர்களில் கி.பி 1049 ஆண்டளவில் இலங்கையை ஆண்டவனன விஜயபாகு என்பான் குறிப்பிடத்தக்கவன்.

இந்த அரசனின் அரசியல் திறமை பற்றியும்சோழர் ஆட்சியை இவன் எவ்வாறு இங்கு சீர்குலைந்தான் என்பது பற்றியும் அண்மையில் 'வீக்என்ட்' பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்றில் விளக்கப்பட்டுள்ளது.

"முதலில் சோழர் நாட்டின் மீதுஅவன்படையெடுக்க விரும்பினன். ஆனல் அவனதுபடைகளில் இருந்த தமிழ் கூலிப்படைகளின் நடத்தையால் விரக்தியுற்ருன். பின்னர் சோழர்களின் எதிரிகளோடு இந்த அறிவாளியான இலங்கை புத்திரன் நட்பு ஏற்படுத்திக் கொள்வதைப்பார்க்கின்ருேம். அதன்விளைவாக, சோழ ராஜ்யம் எல்லாப்பகுதிகளாலும் சுற்றிவளைக்கப் படுகின்றது. பர்மிய மன்னன் அனுரத்தாவுடன் விஜயபாகு ஒப்பந்தம் செய்து கொண்டான். பின்னர் சோழர்களின் கடும் எதிரிகளான கலிங்கரோடும், பாண்டியரோடும் நட்பு ஏற்படுத்திக் கொள்கின்ருன்.

இவ்வாறு சோழ சாம்ராஜ்யம் இலங்கையாலும் நட்பு நாடுகளாலும் கண்ணுக்குத் தெரியாத ஒருவளையம் மூலம் சுற்றிவளைக்கப் பட்டுவிட்டது. இதன்மூலம் சோழர்கள் மேற்கொண்டும் இலங்கைமீதுபடையெடுக்க முடியாமல் செய்யப்பட்டது''.

### பி. எஸ். பி.

### துப்பாக்கி பிஸினஸ்

இலங்கைக்கு ஆயுதம் வாங்குவதில் இலங்கை அரசுக்கு எவ்வளவுபணவிரயம் ஏற்படுகின்றது என்பது ஒரு புறம் பெரும் பிரச்னையாக இருந்த போதிலும் இந்த பிஸிலஸ்நீடிப்பதனல் பல முதலாளிகள் பெரும் பணம் சம்பாதித்து வருவது இப்பொழுது வெளிச்சமாகிவருகின்றது.

அமெரிக்காவிலிருந்து வாங்கிய ஆயுதங்களில் பழசாய் போனவைகளையும், தற்கால போர்முறைக்கு உதவாதவையுமான ஏராளமானஆயுதங்களை இந்த முதலாளிகள் இங்கு கொண்டுவந்து இறக்குகிருர்களாம்.

வடக்குக்கிழகில் நடக்கும் போரை ஒரு சாட்டாக வைத்து இந்த ஆயுதகுவிப்பு தாராளமாக்கப்பட்டுள்ள போதிலும் கொலை, கொள்ளைகளைத் தமது நாளாந்த தொழிலாகக்கொண்டுள்ள கோஷ்டிகளுகக்கும் அவை தாராளமாகக்கிடைக்க ஆரம்பித்துள்ளனவாம். சமீபகாலமாகதென்னிலங்கையில் நடைபெற்றுள்ளபலசம்பவங்களுக்கு இப்படியான ஆயுதங்களே பயன்பட்டுள்ளனவென்று கூறப்படுகின்றது.

தமிழ்ப் பகுதிகளிலும் அவைகளை அண்டிய பகுதிளிலும் குடியமர்த்தப்படும் சிங்களக் குடியேற்றக்காரர்களுக்கு துப்பாக்கிகளை வழங்கி தாராளமாக்கியுள்ள அரசாங்கத்தின் போக்கைப்பார்த்தால் காலப்போக்கில் வீட்டுக்குவீடு துப்பாக்கி வைத்திருக்கவேண்டிய கட்டாயம் உருவாகிவிடும் போலிருக்கிறது.

இலங்கையில்போதைவஸ்து கடத்தும்கும்பல்கள்கூட அதை கைவிட்டு துப்பாக்கி பிஸ்னஸில் இறங்கிவிடக்கூடும்.

இந்த பிஸினஸ் போகிற போக்கைப் பார்க்கையில் இதில்தென்னிலங்கையிலுள்ள பெரும்புள்ளிகள் பலர் நல்ல லாபம் பெற்றுவருவதாகத் தெரிகின்றது.

அண்மையில் 'ஐலன்ட்' பத்திரிகையின் வாடிக்கை கட்டுரையாளர் "கவுட்டில்யா'' இதுபற்றி மறைமுகமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் ஒரு குறிப்பு வருமாறு:

"போர் ஆயுத சந்தை'' பற்றி விமர்சிக்கையில் மேரி கோல்டர் இதனை ஒரு பிஸினஸ் (வியாபாரம்) எனக் குறிப்பிட்டார். வேறு எந்த வியாபாரத்தையும் போன்றதல்ல; உண்மையில் போர் ஆயுத வியாபாரத்தைப்போல வேறு வியாபாரம்கிடையாது. ஆயுத விவகாரங்கள் குறித்து பஸார் கிசுகிசுப்புகளும் இப்பொழுது மிகச் சாதாரணமாகவும் நடைபெறுகின்றன. (பத்துபிலலியனில் இரண்டு சதவீதமென்ருலும் 500 மில்லியன் ரூபாவாகும்) போகிற போக்கில் இந்த விடயமாக ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன விரைவில் ஒரு விசாரணை குழுவை நியமித்தாலு ஆச்சரியமில்லை!''

★

### ஊர்திரும்ப விரும்பாத கூலிப்படை வீரர்

இராணுவத்தினர் அட்டூழியம் புரிவதற்கு காரணமாக அவை என்ன?

முன்னள் பிரிட்டிஷ் விமானப்படை வீரரும் "கீனிமீனி'' கூலிப்படையைச் சேர்ந்தவரும் இலங்கை அரசபடைகளுக்கு பயிற்சியளிப்பவருமான டிம்மிடோ கோர்ட்டி என்பவர் இதற்கு பதிலளிக்கின்ருர்.

"ஒழுங்கீனம் அட்டூழியம் புரியத் தூண்டுகின்றது. அச்சத்தில் இருககும், முறையாகப் பயிற்றப்படாத படையினர் அட்டூழியம் புரிவர்'' என்று கூறும் அவர் "ஆனல் நான் அளிக்கும் பயிற்சி அட்டூழியம் புரிவதைத்தடுக்கும்'என்கிருர்.

பெல்பாஸ்ட்டைச் சேர்ந்த டோகேர்ட்டிக்கு 44 வயது இலங்கை ராணுவத்தினருக்கு தமிழ்க் கெரில்லாக்களுக்கு எதிராகச் சண்டை செய்வதற்கான பயிற்சியளிக்கும் இவர் தமது ஏனைய சகாக்களுடன் சேர்ந்து கொண்டு ஊர் திரும்பவிரும்பவில்லை.

இலங்கைப்படைகள் அப்பாவித்தமிழருக்குக்கெதிராக அட்டூழியம் புரிவதை ஆட்சேபித்து லண்டன் கீனிமீனி சேவை கூலிப்படையைச்யைச் சேர்ந்த பலர் இலங்கையில் சேவையாற்ற மறுத்து ஊர்திரும்பிவிட்ட போதிலும் டோகேர்ட்டி போன்ற சிலர் இன்னமும் தங்கியிருக்கின்றனர்.

இவர்கள் பற்றிய பேட்டி கட்டுரையொன்று அண்மையில் லண்டன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

ஜோன்பாஸ்மூர் என்பவரால் எழுதப்பட்டுள்ள இப்பேட்டிக்கட்டுரையில் பிரிட்டிஷ் கீனிமீனி கூலிப்படையைச்சேர்ந்த டோகேர்ட்டி "இலங்கைப்படைகள் அட்டூழியங்கள் புரியக்கூடும். நாம் இங்கேஇருப்பதால் அது அதிக

(5-ம் பக்கம் பார்க்க)



யாழ். செயலக முன்றலில் நேற்றுக்காலை இடம்பெற்ற சர்வமத [பிரார்த்தனையின்போது கலந்துகொண்ட மக்களையும், யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தையும் படத்தில் காணலாம்.

## ஹோமியோபதி கருத்தரங்கு

யாழ்ப்பாணம் சனி

வட இலங்கை ஹோமியோபதி சங்கம் நடாத்தும் 20-வது கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பி. ப. 1-30 மணிக்கு நடைபெறும்.

டாக்டர் ரி. ஏ. ருகல், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, டாக்டர் ம. வேலுப்பிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

## வீர மரணம்

யாழ்ப்பாணம், சனி

வல்வை மயிலியதனை ராணுவ முகாமை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட நேரடி மோதலில், விடுதலைப் புலிகளின் போராளிகளான 2-வது லெப்ரினன்ட் ஐஸ்டின் (தலைமன்னார்), 2-வது லெப்ரினன்ட் மார்ஷல் (முழங்காவில்), சங்கர் (சூரியகுமார் கரவெட்டி), சிவா (சிவதாஸ் கரவெட்டி) ஆகியோர் வீர மரணமடைந்தார்கள்.

மேற்படி நேரடிப் போரில் மொத்தம் பத்து விடுதலைப் புலிகள் வெற்றிக்காக வீர மரணமடைர்தனர். (எ)

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அதிகம் உழவுக்குப் பயன்படுத்தப்படாததும் இதுவரை என்ஜின் கழற்றப்படாததுமான MF 240 36 ஸ்ரீ 9000 தொடரிலக்கம் கொண்ட டிரக்டர் பெட்டி, ரில்லர் ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. ஆ. இரட்ணராஜா, 235/8 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. சி-8410

### தவறிவிட்டது

A. T. பொன்னுத்துரை சின்னையாபுரம் வவனிக்குளம் என்னும் முகவரியுடைய உழவுயந்திர அடிஉறுதிப் புத்தகம் (25 சிறி 9515) தவறிவிட்டது. கண்டெடுத்தோர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும். நாகநாதன் ஸ்ரோஸ் கல்வியங்காட்டுச் சந்தை யாழ்ப்பாணம். சி-8415

### வகுப்புக்கள்

A/L 89 2-வது பிரிவு 04 - 04 - 1987 ஆரம்பம்: பி. ப. 1 மணிக்கு. தாவரவியல் திரு. சிவவீரசிங்கம, விலங்கியல் திரு. தம்பிராஜா, தூய் / பிரயோக கணிதம் திரு. பிரேம்நாத். பௌதிகவியல் திரு. ரவீந்திரநாதன், இரசாயனவியல் திரு. நாகரட்ணம். 3 ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதிக்கு அண்மையில். சி-8409

LIDO
From Today
Daily at 10-30 a. m.
2-30 & 4-30, 6-30 p.m.
MAX DUGAN
RETURNS
(colour & action)

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30, 2-30. 4-30,
6-30 p. m.
Alfred Hitchcocks
James Stewart
in
Vertigo
Colour! Suspense!
Excitement
(அல்பிரட் கிச்சொக்கின் மர்மப் படம்)

## மதத்தால் வேறுபடாமல் பிரச்னைகள் ஏற்படும்போது ஒருமித்து குரல் எழுப்பவேண்டும்

யாழ்ப்பாணம், சனி

"எமது மண்ணிற்காக போராட்டம் நடத்தும் நாம் எம்மில் பலருக்கு உரிமைகளை வழங்குகிறோமில்லை, சாதி, சமயம் என்ற பாகுபாடு எம்மால் அநுசரிக்கப்படும் வரை நாமும் மனித உரிமைகளை மீறியவர்களாகவே கருதப்படுவோம்"

இவ்வாறு நேற்று யாழ். முன்றலில் நடைபெற்ற பிரார்த்தனை வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய ஜெபநேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; எம்மில் பலரை அடக்கி வைத்து விட்டு நாம் உரிமைக்காகப் போராடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்றார்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வைபவத்தில் பேசும்போது, 'நாங்கள் மரணத்திற்கு அஞ்சாத விரர்கள். மரண பயற்திற்குத்தான் அஞ்சுகிறோம். எனவே மரண பயத்தை மாற்றுவதற்கு ஆன்மிக பலம் வேண்டும்' என்றார்.

மௌலவி எஸ். சதுக்கத்துல்லா பேசுகையில்; மதத்தைக் கொண்டு நம் வேறுபடக்கூடாது. என்ன பிரச்னை வந்தாலும் நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும என்று கூறியதுடன் மதங்களை வைத்துக் கொண்டு நாம் வேறுபடக் … னிதர்கள் என்ற … கயில் எல்லோரும் ஒன்று … வேண்டும் என்று தெரிவித்தார்.

… றும் பல சமயப் பெரியார்களும் கருத்துரை வழங்கி … ர்கள். (ஓ)

## இலங்கை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகஇருக்காது" என்கிறார்.

பயிற்சியின்போது இந்தஇளைஞர்கள் சுடஆரம்பித்தால்நிறுத்த வே முடியாது மெகஸினில் குண்டுகள் தீர்ந்து போகும் வரை சுட்டுக்கொண்டிருப்பார்கள். இப்படித்தான் அப்பாவிமக்கள் கொல்லப்படுகிறார்கள்" என்கிறார் அவர்.

## மனித உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து நடத்திய இப்பிரார்த்தனையில் மும்மதத்திளரும் கலந்து கொண்டு பிரார்த்தனை நடத்தினார்கள்.

நேற்றுக்காலை 8-45 மணியளவில் மும்மதப் பெரியார்களும் குத்துவிளக்கேற்றி ஆரம்பிதது வைத்த இப் பிரார்த்தனையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம், செயலக ஊழியர்கள், சர்வமத பிரமுகர்கள், பெண்கள் உட்பட நூற்றுக் கணக்கான பொதுமககள் கலந்துகொண்டனர்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத் தலைவர் திரு. இ. சீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இப்பிரார்த்தனையில் நல்லைஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பெரியகோயில் பங்குத் தந்தை ஜெபநேசன் அடிகளார், ஜெயசீலன் அடிகளார், சங்கைக்குரிய சகோதரி சோபியா, வண சர்வானந்த அடிகள். மௌலவி எஸ். சதக்கத்துல்லா, பேஸி இமாம், ஆகியோர் கலந்துகொண்டு வழிபாடு நடத்தினார்கள்.

காலை 8-45 மணிக்கு ஆரம்பித்த இப்பிரார்த்தனை வழிபாடு நண்பகல்வரை நீடித்தது. (ஓ)

இன்றைய வெளியீடு
'நீதியின் குரல்'
★ அர்ச்சுன் ★ பானுப்பிரியா ★ Y விஜயா
எம். ஜீ. எம். வீடியோ ஹோம்,
28, மொடேன் மாக்கற், யாழ்ப்பாணம்.
(மேன்மாடி) (சி 8411)

# ஆலயங்களையும் வழிபடுவோரையும் ஷெல் அடியிலிருந்து காப்பாற்றுங்கள்!

## ஜனாதிபதிக்கு மாவை ஆதீன முதல்வர் மகஜர்

யாழ்ப்பாணம், சனி

"முழு இலங்கைக்கும் இந்து சமய சமூக சேவைகளில் வழிகாட்டியாக உதவக்கூடிய வரலாற்றுப் பெருமை, பூர்வீக மகிமைகொண்ட இத்தலத்தை ஜனநாயக பாரம் பரியரீதியில் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியாகிய உங்களுடையதாக இருப்பதால் எமது ஆலயக் கட்டிடங்களையும், உடமைகளையும் வழிபடுவோர்களையும் இராணுவ ஷெல் தாக்குதல் அழிவிலிருந்து காப்பாற்ற உதவுங்கள்"

இவ்வாறு மாவைக் கந்தன் ஆதீன முதல்வர் மகாராஜசிறி சண்முகநாதக்குருக்கள் ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"நிகினி போயா" என்று சிங்கள மக்கள் நோன்பு நோற்கும், எமது நோன்புமான தைப்பூசபௌர்ணமியை அந்தமாகக்கொண்டு நடத்தப்படும் ஜனவரி 23, 24 ஆகிய திகதிகளில் இலட்சார்ச்சனையின் 7ம், 8ம் திருவிழாவின்போது பெருந்திரளான பக்தர்கள் கோவிலில் கூடியிருந்தபோது இடம்பெற்ற ஹெலிகாப்டர் தாக்குதலின்போது கோவில் பாவனைக்குரியஇருபசுமாடுகள் சூட்டுக்காயங்களால் இறந்ததுடன் கோவில் உள்வீதி மண்டபம் கோவில்மதில் ஆதியன பலத்த சேதத்துக்குள்ளாயின.

பெப்ரவரி 26 வியாழக்கிழமை அதிகாலை சிவராத்திரி பூசையைத் தரிசிக்க வந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், குழந்தைகள் முதல் முதியோர் வரை ஹெலிச் சூட்டுக், ஷெல் தாக்குதல்களினால் பீதியடைந்து மயக்க முற்ற நிலையிலும், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையில் சுமார் 5 மணித்தியாலங்கள் ஆலயத்துள் முடங்கிக் கிடந்தனர்.

இத்தகைய பயங்கர ஷெல் தாக்குதல்களினால் கோவிலின் மேற்கு வாசலிலுள்ள இராஜகோபுரம். பழனியாண்டவர் சந்நிதி, வசந்தமண்டபம், வேட்டை மண்டபம், இசையாளர் மண்டபம், ஆலய அலுவலகம், மடங்கள் ஆதியன பலத்த சேதத்துக்குள்ளாயின.

அநுராதபுரத்தில் உள்ள புனித அரசமரம் போன்று சுமார் 500 வருடங்களுக்கு மேற்பட்ட 'ஸ்தலவிருஷ்ஷம்' என்று சொல்லப்படும் புனித காஞ்சி மாமரம் உட்பட பல விருட்ஷங்கள் ஷெல் தாக்குததால்அழிக்கப்பட்டுள்ளன.

மாவிட்டபுரம் ஆலயம் இலங்கையில் உள்ள சகல சமூகத்தவருக்கும் உதவியாக இருந்து வந்துள்ளது என்பதை ஆலயத்திற்கு வந்துபோன பிரமுகர்களின் பதிவேட்டில் இருந்து அறிய முடியும் எனவே இவ்வாலயத்துக்கு ஏற்பட்ட இழப்பீடுகளை நிவர்த்திசெய்து தர முடியுமாஎன ஆராய்ந்து தங்களது பதிலை எதிர்பார்க்கிறேன். [வா]

## பருத்தித்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராணி (வயது 60) எஸ்.தர்மலிங்கம் [வயது 80) ரீ. மலர் (வயது 45)

ஷெல் தாக்குதலில் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போதே வல்லைவெளியில் அம்புலன்ஸ் ஹெலி குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகித் தீக்கிரையானது.

அம்புலன்ஸில் சென்ற மந்திகை ஆஸ்பத்திரி மேற்றன் பாலகிருஷ்ணன் உயிர்தப்பி வந்து சேர்ந்தார்.

அம்புலன்ஸ் சாரதி எஸ். பரஞ்சோதி கருகி மாண்டார். அம்புலன்ஸிற்குள் இருசடலங்கள் கருகி எரிந்து காணப்பட்டன. இத்தாக்குதலில் பலியான மூவரின் சடலங்களும் நேற்று மீட்கப்பட்டன.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் சுமார் மூன்றரை மணியளவில் ஹெலிகாப்டர் தாழப்பறந்து துப்பாக்கிப்பிரயோகங்களையும் தாக்குதல்களையும் மேற்கொண்டது வல்லிபுரக்கோவில் பகுதியிலும் ஹெலிகாப்டர் பல தடவைகள் வட்டமிட்டு தாக்குதல்களை மேற்கொண்டது

மக்கள் அச்சத்தின் காரணமாக வெளியேறி ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். (எ)

## காங்கேசன்துறை மக்கள் வங்கி இடமாற்றம்

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன் துறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக மக்கள் வங்கி, காங்கேசன் துறைக்கிளை தற்காலிகமாக சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளைக் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வங்கி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளைக் கட்டிடத்தில் செயல்படும்.

## எரிபொருள் விற்பனை விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்தில் பெற்றோல் டீசல் ஆகியவற்றின் விற்பனை விலைகள் யாழ். அரசாங்க அதிபரினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுப்பர் பெற்றோல் ஒரு லீற்றர் 16 ரூபாவாகவும், ஒட்டோ டீசல் ஒரு லீற்றர் 10 ரூபா 50 சதமாகவும், விற்பனை செய்யப்படவேண்டும். (வா)

## குரும்பசிட்டி மக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

குரும்பசிட்டியில் தமது வீடுகளை விட்டு வெளியேறியவர்களும் அவ் வீடுகளை பார்க்க விரும்புவோரும் இன்று காலை 9 மணிக்கு சனிக்கிழமை உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சந்திக்குமாறு மயிலிட்டி தெற்கு பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (வா)

## பஸ் விபத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ச. பஸ்ஸிற்கும், தனியார் பஸ்ஸிற்குமிடையில் சைக்கிலில் சென்ற இருவர் சிக்கிய போது இவ் விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் உடுவிலைச் சேர்ந்த அப்பன் (21 வயது) ஸ்தலத்தில் பலியானார் பூவரசங்குளத்தை சேர்ந்த மாசிலமணி (61 வயது) காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

# கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணை கிடைக்கும்

யாழ்ப்பாணம், சனி யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்ணெண்ணையின் விலை கட்டுப்பாட்டு விலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் மண்ணெண்ணை ரூ 9 50 சதமாகவும், ஒரு போத்தல் மண்ணெண்ணை ரூ 7.15 சதமாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இந்தக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது.

கூட்டுறவுச்சங்கங்களும் தனியார் விற்பனை நிலைய முகவர்களும், மண்ணெண்ணையை மேற்படி கட்டுப்பாட்டுவிலைக்கு விற்பனை செய்கின்றார்களா என்று அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் மேற்பார்வை செய்வார்கள் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (வா)

## ஆஸ்பத்திரிக்கு வரும்போது அம்புலன்ஸ் எரிபொருள் இல்லாததினால் தாமதித்தது

யாழ்ப்பாணம், வெள்ளி "எனது வீட்டு அறைச்குள் நித்திரை செய்தபோது ஏதோ ஒரு வஸ்து எனது இடதுகையிலும் காலிலும் விழுந்துபலத்த காயத்தை ஏற்படுத்தியது. இதன்பிறகுதான் வானத்தில் ஹெலிகாப்டர் ஒன்று பறந்து சுட்டவண்ணமிருந்ததை என்னால் உணரமுடிந்தது''.

இவ்வாறு ஹெலிசூட்டுக்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட காங்கேசன்துறை கல்லூரிவீதியைச் சேர்ந்த இராசாங்கம் இராசநாயகம் (வயது 39) என்பவர் காங்கேசன்துறையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஹெலிச்சூடு பற்றித் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

நேற்றுமுன்தினம் அதிகாலை ஆறுமணியளவில் ஹெலியின் சூட்டுக்கிலக்காகி தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரியில் நண்பகல் ஒரு மணியளவில் அனுமதிக்கப்பட்டேன்

யாழ். ஆஸ்பத்திரியில் என்னை அனுமதிப்பதற்காக ஏற்றிவந்த அம்புலன்ஸுக்குப் பெற்றோல் இல்லாததினால் யாழ் ஆஸ்பத்திரி வரத்தாமதமாகியது.

சம்பவநேரம் எனது மனைவியும், இரண்டு பிள்ளைகளும் வீட்டு விறுந்தையில் படுத்திருந்தார்கள். அவர்கள் மூவரும் தெய்வாதீனமாக காயம் எதுவும் ஏற்படாமல் தப்பினார்கள். (வா)


பிரயாண ஒழுங்கு

★ Canada

★ Australia ★ Germany

★ France ★ Italy

★ குறிப்பாக France, Germany, Italy ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் கொழும்பிலிருந்து வெகுசீக்கிரத்தில் அழைத்துச் செல்ல உள்ளார்.

அத்துடன்

கப்பலில் வேலை செய்வதற்கு

A. B. (Sailor), Oiler, Deck boy, Mess boy

ஆகியவற்றுக்கு உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

எமக்கு வேறுகிளைகள் கிடையாது. 3823



ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனத்தாரின் வியாபார இடமாற்ற

அறிவித்தல்

இல. 275பீச்ரேட், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது ஸ்தாபனம் 1-4-87 முதல்

"நிஷாம் மகால்"

கே. கே. எஸ். வீதி

குளப்பிட்டிச் சந்தி அருகாமையில்,

கொக்குவில்.

விலாசத்திற்கு இடமாற்றம் செய்துள்ளோம் என்பதை எமது அன்பார்ந்த ஆர் வி. ஜி, பீடி விறபனையாளர், வாடிக்கையாளர் பாவனை யாளர் அபிமானிகள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

நிர்வாகம்

ஆர். வி. ஜி. பீடி,

நிஷாம் மகால்,

கே. கே. எஸ். வீதி,

குளப்பிட்டிச் சந்தி அருகாமை,

கொக்குவில்.

[சி 8311]


## இலங்கையில் மனித உரிமைகள் மீறல் – 12

# ஒரு குடும்பத்தின் ஏழு பிள்ளைகளில் ஐவரை பலிகொண்ட இராணுவ வன்செயல்கள்

"நான், காத்தான் லெட்சுமி (55 வயசு) அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஆ நல்லதம்பி என்பவர் மனைவி கீழே உள்ளவை உண்மையெனக் கூறுகிறேன்.

"எமக்கு 8 பிள்ளைகள் - ஏழு ஆண்கள் 1 பெண் - இருந்தனர். அக்கரைப்பற்றில் நாம் வசிக்கிறோம். உடும்பன் குளத்தில் எமக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் எனது கணவர் விவசாயம் செய்கிறார். எனது இரு மூத்தமகன்களும் விவசாயிகள்."

"23-03-85 அன்று எமது கிராமத்தில் அதிரடிப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது எனது 4-வது மகன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

"... எனது 5-வது மகன் யாழ். உயர் நீதிமன்றத்தில் எழுதுவினைஞராகக் கடமை புரிந்து வந்தார். 30 11-85 அன்று யாழ்ப்பாணம் செல்லும் வழியில் கிரான்குளத்தில் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார். அவரைக் கைதுசெய்ததை அதிரடிப் படையினர் மறுத்து வருகின்றனர். இதுபற்றி அதிகாரிகளுக்கு நான் செய்துள்ள முறைப்பாடுகளால் இதுவரை பயனில்லை."

"... எனது இன்னொரு மகனை துரைராஜசிங்கம் 5 1-86 அன்று எமது கிராமத்தில் தேடுதல்நடத்திய அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டார். இன்றுவரை அவர் விடுதலை செய்யப்படவில்லை.

"19-2-86 அன்றுஎனது கணவர் 3-வது மகன் விநாயகமூர்த்தி, 7 வது மகன் கோபாலகிருஷ்ணன் மகளின் கணவர் பாக்கியராசா, மருமகள் உட்பட பலர் எமது வயலில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தனர் அப்போது அங்கு வந்த படையினர் கணவன், இருமகன்மார், மருமகன் ஆகியோரைச் சுட்டுக்கொன்றதுடன் மருமகளை மானபங்கப்படுத்தினர்.

"படையினரின் நடவடிக்கைகளால் எமது முழுக்குடும்பமுமே அழிக்கப்பட்டுவிட்டது"

★ ★

### செப்ரெம்பர்

19-ம் திகதியன்று மட்டக்களப்பில் ஜீப் பொன்றில் கமாண்டோக்கள் சென்று கொண்டிருக்கையில் தமிழ் கெரில்லாக் குழுவொன்றினால் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் கார்க்குண்டினால் 7 கமாண்டோக்கள் காயமுற்றனர். இச்சம்பவத்தையடுத்து மட்டு மாவட்டத்தில் கமாண்டோக்கள் ஆத்திரமூட்டும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தனியார் கல்விநிலையமொன்றினுள் புகுந்த இவர்கள் மாணவரைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். 67 வயது நிரம்பிய ஒருவரையும் சுட்டுக் கொன்றனர் இச்சம்பவங்களில் ஒரு 1½ வயது குழந்தை, அடையாளம் காணப்படாத இளம் பெண் உட்பட குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்; 6 இளைஞர்கள் காணமற்போயினர்.

### ஒக்டோபர்

12-ம் திகதியன்று மன்னார் அடம்பனில் தேடுதல்-அழித்தல் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருக்கையில் தமிழ் கெரில்லாக்கள் தாக்கியதில் பல ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இ சம்பவத்தையடுத்து பாரியபழிவாங்கும் நடவடிக்கையொன்றை இப்பகுதியில் படையினர் தொடர்ந்து பலநாட்கள் நடத்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவினால் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பப்பட்ட இருபகஜர்களின்படி 12ம் - 22ம் திகதிகளுக்கிடையில் குறைந்தது 21 தமிழ் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். 15பேர் காயமடைந்தனர்; அத்துடன் இப்பகுதியில் குண்டுவீச்சு, ஹெலி, ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றதாகவும், இதனால் 200க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததாகவும் இக்குழு குறிப்பிட்டிருந்தது. கொல்லப்பட்டோரில் 11 பேர் பெண்கள்.

### அகதிகள் கொலை

அக். 31ம் திகதியன்று கதிரவெளி, அம்பந்தன்வெளி அகதி முகாம்களிலிருந்து பெருமெண்ணிக்கையிலான அகதிகளை படையினர் கைதுசெய்து கொண்டு சென்றனர், இவர்களில் பெரும்பாலானோர் பின்னர்விடுதலைசெய்யப்பட்டனர். 6 பேர் காணமற்போய்விட்டனர். நவ. 3ம் திகதி இலங்கை தொலைக்காட்சி செய்தியில் ஆறு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டதுடன் மேற்கூறிய அகதிகள் பெயர்களும் தெரிவிக்கப்பட்டன.

### பெரிய புல்லுமலையில்

மட்டக்களப்பிலுள்ள கிராமமான பெரிய புல்லுமலையில் நவ. 1ம் திகதி பாதுகாப்புப் படையினர் பிரவேசித்து மேற்கொண்ட வெறித்தனமான நடவடிக்கையில் குறைந்தது 20 தமிழ் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். படையினரால் கைதுசெய்யப்பட்ட வேறு 21 பேர் 'காணமல் போய்விட்டனர்'. இக்கிராமத்திலிருந்து செல்கையில் படையினர் தம்முடன் 3 இளம்பெண்களையும் கைதுசெய்து கொண்டுசென்றனர். பின்னர் இவர்களின் சடலங்கள் மானபங்கப்படுத்தப்பட்ட அடையாளங்களுடனும் சூட்டுக்காயங்களுடனும் கண்டெடுக்கப்பட்டன.

இக்கொலைகளையடுத்து அங்கிருந்த 350 குடும்பங்கள்வெளியேறி மட்டககளப்பில் தஞ்சமடைந்தன.

இசசம்பவம் தொடர்பாக 3 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தலைமையில்விசாரணைகள் நடைபெற்றதாகவும், 35 பேர் சாட்சியமளித்திருந்தனரென்றும் கொழும்பு பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருந்தன. ஆயினும் விசாரணையின்பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.

### பயணிகள் கொலை

டிச. மாதம் 5ம் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனைநோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்மீது களுவாஞ்சிக்குடியில் கமாண்டோக்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பிரயாணிகள் கொல்லப்பட்டனர்.

டிசம்பர் மாதம் 8ம் திகதியன்று நிலாவெளியிலுள்ள அகதிகள் முகாமொன்றிலிருந்து விறகு. கொண்டுவரச் சென்ற மூன்று அகதிகள் 12ம் மைல் கல்லடியில் ராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். சடலங்கள் இறக்கண்டி ராணுவ முகாம் கொண்டுசெல்லப்பட்டன.

### அரைகுறை எரிந்தநிலையில் சடலங்கள்

டிச 9ம் திகதியன்று இரவு 12 மணியளவில் ஊர்காவற் படையினர் என நம்பப்படும் ஆயுதபாணிகள் குழுவொன்று திருமலையிலுள்ள கிண்ணியாவிலுள்ள 3 தமிழர், 1 முஸ்லிமின் வீடுகளினுள் புகுந்து நால்வரைக் கைது செய்து கொண்டுபோனது. அடுத்தநாள் இவர்களின் சடலங்கள் அரைகுறையாகஎரிந்த நிலையில் ஆலங்கேணியில்(கிண்ணியாவிலிருந்து 3 கி. மீற்றர்) இரு குழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. இறந்தோர் விபரம்: ராசையா பஞ்சலிங்கம் (வயது 36), செல்லதம்பி வேலாயுதம் (வயது 40), பிச்சைத்தம்பி பைஸால்(வயது 26), சோமசுந்தரம் அமிர்தலிங்கம் (வயது 22).

டிச. 31ம் திகதியன்று பன்குளத்தில் நித்திரையிலிருந்த 8 விவசாயிகள் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களது சடலங்கள் இவர்களுடைய குடில்களுடன் சேர்த்து எரிக்கப்பட்டன.

பன்குளம் இதற்குமுன்னரும் ராணுவத்தினரின் தாக்குதல்களுக்கிலக்காகியிருந்தது. இதன் விளைவாக இங்கு வசிக்கும் பெரும்பாலானோர் ,முக்கியமாக விவசாயிகள். இக்கிராமத்தைவிட்டு வெளியேறியிருந்தனர். இம்முறை தாக்குதலுக்குள்ளான விவசாயிகள் தமது காணிகளில் விவசாயம் செய்யராணுவத்தினரின் அனுமதிபெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[இத்தொகுப்பு இத்துடன் நிறைவுற்றது]

குறிப்பு: இலங்கையில் மனித உரிமைகள் மீறல் என்ற தலைப்பில் வெளியான இந்த 12 கட்டுரைகளும், லண்டன் தமிழர் தகவல் நடுவம், மனித உரிமைகள் கவுன்ஸில்

(7-ம் பக்கம் பார்க்க)


எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) அர்ஜுன் பத்மப்பிரியா பானுச்சந்தர் "நீதியின் குரல்" (V. G. P. MASTER)

(2) சிரஞ்சீவி ராதா சுஹாசினி "ராட்சஷன்" (SHANTH MASTER)

(3) இளவரசன் சசிகலா செந்தில் "மாணவி மனைவி ஆகிறாள்" (PYRAMID MASTER)

( ) கமல் ஜெயச்சித்ரா நாகேஷ் "குமார விஜயம்" (THOMSUN MASTER)

(5) ஜெமினி பத்மினி தங்கவேலு "மீண்ட சொர்க்கம்" (PYRAMID MASTER)

(6) மோகன் சுஹாசினி விசி "ஆனந்த ஆராதனை" (PYRAMID MASTER)

(7) ராஜேஷ் K. R. விஜயா ரேவதி "இலங்கேஸ்வரன்" (PYRAMID MASTER)

குணம் வீடியோ சென்ரர்

42 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665 [எ 3824]

# இன்றைய பலன்

மாதம்: பங்குனி
திகதி: 21 [87-4-4]
கிழமை: சனி
திதி: ஷட்டி மு.இ.வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் முழுநாளும்

மேடம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தியேற்படும். பெரியோர் ஆதரவும் கிட்டும். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

இடபம்: பொருள் விரயமாகும். வியாபாரத் துறையில் பிணக்குகள் தோன்றும். சிந்தையில் குழப்பத்திற்கும் இடமுண்டு.

மிதுனம்: நினைத்ததில்தடை நிம்மதி பிறக்கும். பொருள் தவறக் கூடும். உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

கடகம்: இதயத்தில் நல்லெண்ணங்கள் தோன்றும். கடந்தகால சம்பவமொன்று முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். வேண்டிய ஒருவரின் உதவியும் உண்டு.

சிங்கம்: தவறுகள் நடக்கலாம். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலைவாரி விடக் கூடும். சிலருக்கு அன்னிய வாசம் அகால போசனமும் உண்டு.

கன்னி: மாணவர்களுக்குப் பொன்னான தினம். எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு. பொதுவான எல்லாத் துறையிலும் அபிவிருத்தி காணப்படும்.

துலாம்: பெரியோர் ஆதரவுண்டு. புத்திரர் மகிழ்ச்சியும் புண்ணிய விருப்பும் உண்டாம். நீண்ட நாள் பிணி இன்று நிவர்த்தியாகும்.

விருச்சிகம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரி விடுவர். இன்று அவதானம் நன்று.

தனுசு: எண்ணிய கருமம் கண்ணியமாய் முடியும். களஸ்திர வழிப் பொருள் வரவும் உண்டு. உறவு முறைகள் பலப்படும்.

மகரம்: உதவி செய்யப் போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் நஷ்டம் தோன்றும். தொழிற் துறையிலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

கும்பம்: பிதாவழிச் செய்தி கிட்டும். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். நீண்ட நாள் மனக்குறை நிவர்த்தியாகும். மேலிடச் சிறப்பும் உண்டு.

மீனம்: தேடிய பொருள் காலடியில் கிட்டும். பரோபகாரச் சிந்தை மேலிடும். இதயத்தில் இனிமை துள்ளும்.

திருமலை ரவீந்திரன்

## 3-ம் மாத நினைவஞ்சலி



திமத்தி ரவீந்திரன சிவம்

தாயின் மடியில்:
01-12-1956

இறைவனடியில்:
04-01-1987

செல்வமகனே! நீர் தாண்டு, காலாண்டு இருந்தும் எமக்கு மாறுத பூச்செண்டு. ஜென்மத்தில் எமக்காக நீர்செய்த திருத்தொண்டு! கண்டு பொறுக்காமல் சாய்ந்ததோ இளங்கண்டு!

அறிவுரையில் மந்திரியானல், ஆசனத்தில் ஆசானய், அன்பு மொழி பேசிய நீயும், எங்கு போனய்? அனைத்தும் பொறுப்பாக பெருமைப்பட செய்து வந்தாய். ஏனோ அந்தரத்தில் அவசியமில்லா அஸ்தமனமானய்.

துன்பம் நீங்கியதென்று துணிவாக இருந்துவந்தோம். தூண் விழுந்ததும் தாக்கத்தையும் மறந்துவிட்டோம்! நீங்காத துன்பமாக மாறிவிட்ட உம் இழப்பை தாங்கும் இதயமும் நீரே தந்திடுவீர், மகனே! படைத்த கடவுள் உன்னை பாதியிலே பறித்துவிட்டார். பரம்பரையில் தீராத பரிதவிப்பை தந்துவிட்டார். பறிகொடுத்து நிற்கின்ற பாவிகள் எம்மிடையில் எப்போ பிறவியெடுப்பாயோ? எதிர்காலத்தில் மனமாற.

கண்ணீர் மல்கும்:
பெற்றோர், சகோதரிமார்,
மைத்துனன், மருமக்கள்,
36, தோம்பை வீதி
உடுவில் கிழக்கு,
சுன்னுகம். (சி 8283)

## இலங்கையில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஸ்காட்லாந்து பிரிவு) ஆகியவை இணைந்துவெளியிட்ட புத்தக வடிவிலான அறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும்.

Sri Lanka – Extra judicial & arbitrary Kill-ings என்ற தலைப்பிலான இவ்வறிக்கையில் 1979 ஜூலை முதல் 86 டிசம்பர் வரையில் நடைபெற்ற சம்பவங்களில் பாரிய மனிதஉரிமை மீறல்கள் என கருதப்பட்டவை இடம் பெற்றுள்ளன. சில படுகொலைச் சம்பவங்களை விபரிக்கையில், இவ்வறிக்கை 'அம்னெஸ்ரி இன்டர் நஷனல்' உட்பட பல்வேறு ஸ்தாபனங்களை மேற்கோள் காட்டுவதினுலும் அவற்றில் பலியானேர் எண்ணிக்கை முரண்படுவதினுலும் அட்டவணை ரீதியில் பலியானேரை வரிசைப்படுத்தவில்லை.

தொகுப்பு: 'ஸேஞ'

## தமிழ் மக்களுக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழருக்குஅதிகபட்ச சுயாட்சி வழங்குவதன் மூலமே தீர்வு காணவேண்டும். அதாவது வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ்மக்கள் கௌரவத்துடன் வாழ வகை செய்யப்பட வேண்டும். இந்திய மக்களும் அரசாங்கமும் இதனையே கோருகின்றனர்'' என்றும் அவர் கூறினுர். (ஊ)

## சேவைக்கால

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். நவரத்தினம், யாழ்ப்பாணம் வேலணை புங்குடுதீவு கல்வி வட்டாரம். செல்வி கே. சின்னத்துரை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை கல்வி வட்டாரம்: திருமதி க. யோகநாதன், கோப்பாய் உடுப்பிட்டி, பருத்தித்துறை கல்விவட்டாரம்.

மாவட்டரீதியிலான சேவைக்கால கல்வி ஆலோசகர்கள் வி. பாலகிருஷ்ணன் (உலோக வேலை பாடநெறி) திருமதி ஆர் சண்முகரத்தினம்(தையல் வேலை பாடநெறி) எஸ். பழனிவேல் (மரவேலை பாடநெறி). எம். சிவம் (மோட்டார் இயந்திர தொழில் நுட்பவியல் பாடநெறி)

செல்வி கே. வேலுப்பிள்ளை (நெசவுவேலைப் பாடநெறி, எஸ். சபானந்தன் (வனைதல் வேலைப் பாடநெறி), எஸ் வைத்தியநாதன் வானெலித் தொழில் நுட்பவியல் பாடநெறி.

## தவக்கால நற்சிந்தனை

### சோதனைகளின்றி சாதனைகளில்லை

துன்பங்களும் துயரங்களும் நாம் அனுபவிக்கும் சித்திரவதை. நாம் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் இவைகளின் தாக்குதலிலிருந்து நாம் தப்பமுடியாது. சோதனைகளின்றி சாதனைகளில்லை. அவரைப்போல் நாம் பாடுபட்டு சிலுவையில் இறக்கவில்லை. நமக்காக நம்முடைய கடப்பில்லாத சுயநலத்துக்காகத் தான் வேதனைகளை அனுபவிக்கிறேம் எள்ளளவும் தியாகமற்ற நம்முடைய வாழ்க்கைப் பாடுகள் அனைத்தும் விரயமானவையே என்பதை இத்தவக்காலத்தில் உணர்வோமாக மனதின் சபலங்களில் வாழ்வின் சலனங்களில் அலைமோதி, இறைவனைக் கைநழுவ விட்டுவிட்டுக் கண்கலங்கி நிற்கிறேம். உறங்கும் மானிடத்தை விழிக்க வைப்பதற்காக மனிதகுலம் இழந்த சுவர்க்கத்தை மீட்டுத் தருவதற்காக, இறந்துகொண்டிருந்த தெய்வப் பண்புகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக மனித உடல் எடுத்த கிறீஸ்துவிடம் வரம் வேண்டுவோம்

ஓ! இறைவா வரம்பு கடந்த தியாகத்தில் ஒரே ஒரு துளியையாவது எங்களுக்கு கொடுக்க உமது அருளை தாரும். அது ஒன்றே எம்மை முழுமனிதராக்கும். அமைதியின் பாதையில் அது எங்களை இட்டுச் செல்லும்.

சாந்தினி சின்னத்துரை.

## புத்தக விமர்சனம்

### "ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி"

எழுதியவர்: பேராசிரியர் த. இராமதாஸ்

எமது சுகவாழ்விற்கு சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலைகளும், திறமை மிக்க வைத்தியர்களும், நவீன உபகரணங்களும் எவ்வளவு அவசியமோ அதேயளவிற்கு ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பும் அவசியமானது இதன் அடிப்படையில் நமது பகுதிகளில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. பல ஆரம்ப சுகாதாரச் சேவையாளர்களும் சுகாதாரத் தொண்டர்களும் ஈழத்தின் பலபகுதிகளில் பயிற்றப்பட்டு வருகிறுர்கள்.

இவர்களுக்கு ஏற்ற ஒரு நூல் இல்லாதது பெரும் குறையாக இருந்து வந்தது யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் த இராமதாஸ் வெயிளிட்டிருக்கும் 'ஆரம்ப சுகாதாரச் சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி' என்ற நூல் இந்தக் குறையை நிவர்த்தி செய்கின்றது. 102பக்கங்களைக் கொண்ட இந்நூல் பயிற்சி பெறும் அல்லது பயிற்சி பெற்ற ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு மட்டுமல்லா சாதாரண மக்களாலும் எளிதில் வாசித்துக் விளங்கக் கூடியதாக எழுதப்பட்டுள்ளது.

இதிலுள்ள 30 அத்தியாயங்களில் 'கர்ப்பவதிகளின் நலம், குழந்தை வளர்ப்பு, குடும்ப திட்டம், முதலுதவி, கழிவுப் பொருள் அகற்றல், வீட்டுத் தோட்டம்' முதலிய பலதரப்பட்ட விடயங்கள் விபரமாக எழுதப்பட்டுள்ளது. நாளாந்தம் ஏற்படக்கூடிய சிறுவியாதிகளைப் பற்றியும், அவற்றிற்கான சிகிச்சை, தடை முறைகள் பற்றியும் குழந்தை வைத்தியத் துறையில் அனுபவம் மிக்க இந்நூலின் ஆசிரியர் மிகவும் தெளிவாக எழுதியுள்ளார். 18 ரூபாவுக்கு விற்கப்படும் இப்புத்தகம் இத்துறையுடன் சம்பந்தப்பட்டோர்க்கு நன்மை பயக்கும் என நம்பலாம்.

ந. சிவராஜா.

## சட்டவிரோத

# கள் உற்பத்தி விற்பனைக்கு தடை!

(கொழும்புத்துறை நிருபர்)

அனுமதியின்றிக் கள் உற்பத்தி செய்பவர்கள் உடனடியாகத் தமது பகுதியிலுள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களில் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழ்ப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், சட்டவிரோதமாக கள் உற்பத்தி செய்தல் சட்டவிரோதமாகக் கள் விற்பனை செய்தல் சட்டவிரோத விற்பனை இடங்களில் கள் அருந்துதல் ஆகியவையும் தடை செய்யப்பட்டுள்ளன. என்று வட.மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இந்த நிபந்தனைகளை மீறிக் குற்றம் புரிபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று வட மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெற்ற சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொது முகாமையாளர்கள் நலன்விரும்பிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்களை மேற்கொள்வதற்கும் அபிவிருத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் ஒவ்வொரு தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களிலும் திட்ட அமுலாக்கல் குழு தெரிவு செய்யப்பட உள்ளன என்றும் சமாசப் பொது முகாமையாளர் திரு' ஆ. ந. இராசேந்திரன் தெரிவிக்கிறுர்.

## விளையாட்டு போட்டி

மன்னுர், வெள்ளி

தலைமன்னுர் புனித லோறன்சியார் வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் வித்தியாலய அதிபர் திரு யோ. அ. எ. குலாஸ் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக தலைமன்னுர் கட்டளைக்குரவர் அருட்திரு. மொன்ட்வேட் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினுர்.

## பனை அபிவிருத்தி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது. சனசமூக நிலைய உறுப்பினர்களை உள்ளடக்கிய கருத்தரங்குகளை நடாத்துவதற்கும் இதன் மூலமாக கிராம ரீதியிலான பனை உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்கும் விற்பனை விஸ்தரிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது சம்பந்தமான நடவடிக்கைகளில் இச் சபையின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் பனை வளர்ப்போர் சம்மேளனத்தை விரைவில் அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கும், துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான உறுப்பினர்களைக் கிராமந்தோறும் பதிவு செய்வதிலும் கிராம ரீதியிலான கிளைகளை நிறுவுவதிலும் பனை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். உதவி அரசாங்க அதிபர்கள் தலைமையில் இது தொடர்பான கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

## விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடாத்திவரும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நாளை 5ம் திகதி முதல் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறுமென இக்கழகத்தின் தலைவர் திரு. கே. குகதாசன் தெரிவித்துள்ளார்.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் '7 பேர்' கொண்ட உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரபந்தாட்டம், எல்லே, தாச்சி முதலிய சுற்றுப் போட்டிகளும் எதிர் வரும் புதுவருடத் தினத்தன்று மெய்வல்லுநர் போட்டிகளும், வெற்றி பெற்ற கழகங்களுக்கும், வீரர்களுக்கும் வெற்றிக கேடயங்களும், பரிசில்களும் வழங்கப்ப்டும்.

## இவர்களுக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணை தபால் நிலையங்கள் மூலமும் ஓய்வூதியம் பெறுபவர்கள் தமது ஏப்பிரல் மாதத்திற்கான ஓய்வூதியத்தை மேலே கூறப்பட்ட விபரங்கள் கொண்ட கடிதத்தையும் ஆவணங்களையும் சமர்ப்பித்து யாழ். செயலகத்தில் இம் மாதம் 6ம் திகதி பெற்றுக் கொள்ளலாம்.

முறைப்படி குறிக்கப்பட்ட திகதிகளில் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளத்தவறும் ஓய்வூதியக்காரர்கள் ஏப்ரல் 20ம் திகதிக்குப்பின்பு தமது ஓய்வூதியத்தைப்பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வா)


## வைத்தியர் / தாதிகள் தேவை

கிளிநொச்சியில் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட வைத்தியசாலைக்கு அதனை விரிவு படுத்துதல் காரணமாக,

1. வைத்தியர் 2. தாதிகள்

தேவைப்படுகின்றனர்.

வைத்தியர்:- ஆகக்குறைந்தது இலங்கைப் பல்கலைக்கழக உதவிவைத்தியர் சான்றிதழ் உடையவராய் இருத்தல் வேண்டும்.

தாதிகள்:- நல்ல அனுபவமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

தகுதிக்கேற்ப சிறந்த சம்பளமும் இருப்பிடவசதியும் தரப்படும்.

கஷ்டமான சூழ்நிலைகளிலும் சேவையாற்ற விருப்பமுள்ள நேர்மையானவர்கள் மட்டும் 18-4 87இல் முற்பகல் 9-00மணி தொடக்கம் 12-00மணிவரை கீழ்க் கண்ட விலாசத்திற்கு நேரடியாக வரவும்.

"சோதி ஜுவல்லர்ஸ்"

இல 70, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம்,
விரும்பின், வேறு நாட்களில் 109, ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் விலாசத்திற்கு வரலாம்.
[சி-8407]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

னிக்கிழமை 4-4-87

# வல்வையில் ஷெல் தாக்கி இருவர்பலி, ஐவர்காயம், வீடுகள் சேதம் ஐயாயிரம் மக்கள் வெளியேற்றம்

(வல்வெட்டித்துறை நிருபர்)

வல்வை பிரதான இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நாற்திசைகளிலும் ஏவப்பட்ட ஷெல்லினுல் இருவர் பலியானுர்கள் ஐவர் காயமடைந்தனர்.


கம்பர்மலை, உடுப்பிட்டி, பொலிகண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் இருபதுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இருவயோதிபர்களான எஸ். செல்வராசா (72 வயது), சிந்தாமணி தெட்சணுமூர்த்தி 80 வயது] ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

மேலும் வல்வையைச் சேர்ந்த எஸ். தர்மலிங்கம் [வயது 80], கே. ரமேஷ் (வயது 21], கெருடாவிலைச் சேர்ந், எஸ். கிருஷ்ண பிள்ளை, அல்வாயைச் சேர்ந்த கே. வாசு, எஸ். யோத்தம் (வயது 2?) ஆகியோர் காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வை, தொண்டமாறு முகாம்களிலிருந்து மக்கள் குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதைத் தொடர்ந்து புலிகள் வல்வை முகாமை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடாத்தியதில் முகாமிலுள்ள பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் முகாமில் பலத்த சேதங்களும் ஏற்பட்டிருக்கலாம்எனவும் தெரிய வருகிறது.

இத்தாக்குதல்களையடுத்து வல்வைப் பகுதியிலிருந்து சுமார் 5000க்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.




— நன்றி 'இந்து'



யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த 30-ந் திகதி எட்டு நோயாளிகளையும், ஒரு ஊழியரையும் பலிகொண்ட கோட்டை இராணுவத்தின் 'ஷெல்' தாக்குதலைக் கண்டித்து தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஊழியர்களால் தெல்லிப்பழையில் நடத்தப்பட்ட கண்டன ஊர்வலத்தைப்படத்தில் காணலாம்.
(படம்: பலாலி நிருபர்)

## புலிகள்தாக்கி சிப்பாய் பலி

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை - பான்மதவாச் யில் அமைந்துள்ள இராணுவ முகாம்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானுர்.

கடந்தவாரம் சுமார் மூன்று மணித்தியாலங்கள் இடம் பெற்ற மேற்படி தாக்குதலின் போது ஈ. எம். ஆரியரத்தின (வயது 25) என்ற ராணுவசிப்பாயே கொல்லப்பட்டவராவார், மேலும் பலர் காயமடைந்தனர்.

இரவு சுமார் 10 மணியளவில் ஆரம்பமான இச்சமர் சுமார் ஒருமணிவரை நீடித்தது. இறந்தவரின் சடலம் ஹெலிமூலம் திருமலை கடற்படைத் தளத்திற்கு பின்னர் எடுத்துச் செல்லப்பட்டது.

## அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த டிக்ஸிற் – சிறிமா பேச்சு

[கொழும்பு நிருபர்]

இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினுர்.

இப்பேச்சுக்களின் விபரம் எதுவும் உடன் வெளியிடப்படாத போதிலும் இவர்களது சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகக்கருதப் படுகிறது.

இதேவேளை திரு. டிக்ஸிற், ஜனுதிபதி ஜெயவர்த்தனுவை நேற்று முன்தினம் சந்தித்து இந்தியப் பிரதமரின் விசேஷ செய்தியொன்றை கையளித்து பேச்சு நடத்தியதும் அதைத் தொடர்ந்து ஜனுதிபதி ஜெயவர்த்தனு தமது உயர் மட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசனை நடத்தியதும் தெரிந்ததே.

## வல்லை குண்டுவீச்சு சம்பவம்; பரு. வர்த்தக சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், சனி.

நோயாளரை ஏற்றிக் கொண்டு சென்ற பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸ் மீது ஹெலிகொப்டரிலிருந்து நடாத்தப்பட்ட தாக்குதலினுல் நோயாளர் கொல்லப்பட்டதைக் கண்டித்து பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படி அம்புலன்ஸ் வண்டி மீது நடத்தப்பட்ட தாக்குதலானது அரசபடையினர் நோயாளிகளைக்கூட கொலை செய்வார்கள் என்பதற்குஇரண்டாவது உதாரணமாகும். இதற்கு முன்னர் கடந்த ?0-ம் திகதி யாழ்.ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதலை நடத்தி நோயாளரைக் கொலை செய்தது தெரிந்ததே.

"கடந்த ஒருவார காலமாக வல்லை வீதியில் நடந்துவரும் இராணுவ நடவடிக்கைகளால் வடமராட்சி மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

"பல தடவைகள் இவ்வீதியினுல் சென்றஅப்பாவி பொது மக்கள் மீது ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன் பலர் காயம் அடைந்துமுள்ளனர்.

"அரசபடையினர் இவ்வீதியிலுள்ள ஆலயத்தை தாக்கியும் சேதப்படுத்தியுமுள்ளனர். (ஒ)

## கோட்டை இராணுவத்தினர் ஆஸ்பத்திரி மீதான தாக்குதல்: தாதியர் சங்கம் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், சனி.

"கோட்டை இராணுவ முகாம், இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கிலக்காகி மரணமான எண்மரின் குடும்பத்தினருக்கும் வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் இராணுவத்தினரின் இச்செயலுக்குக்கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கிறேம்"

இவ்வாறு, அகில இலங்கை தமிழ் பொதுத்தாதியர் உத்தியோகத்தர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30ம் திகதி அதிகாலைகோட்டைஇராணுவத்தினரின் ஷெல் யாழ். வைத்தியசாலை 19ம் வாட்டில் விழுந்து வெடித்ததில் நோயாளர் 8 பேரும் ஒரு ஊழியரும், மற்றும் பலர் படுகாயமடைந்தது தெரிந்ததே. (வா)

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாத வகையில் பலத்த இழப்புக்களுடன் படையினர் பிற்பகல் இரண்டு மணியளவில் முகாம் திரும்பினர்.

இதன் பின்னரே ஆனையிறவு முகாமைக் கடந்து வாகனப் போக்குவரத்துக்கள் இடம் பெற்றன.

### காவலில் புலிகள்

இதேவேளை புதுக்காட்டு சந்தியிலிருந்து குறிஞ்சாத்தீவுவரை விடுதலைப்புலிகள் காவலில் நிற்பதை காணக் கூடியதாக இருந்தது.

### ஷெல் விழுந்து பாரிய கிடங்கு

மேலும் ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் லொன்றுகுறிஞ்சாத்தீவு சந்தியில் விழுந்து பாரிய கிடங்கு ஒன்று ஏற்பட்டுள்ளது. அதற்கு அருகாமையில் இருந்த பஸ்தரிப்பு நிலையமும் சேதமடைந்துள்ளது.

### மன்னர் சம்பவம்

மன்னர் வெள்ளாங்குளத்திலிருந்து முழங்காவில் நோக்கி நடந்துவந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டதினுல் இராணுவத்தரப்பில் இருவர் பலியானுர்கள், ஆறுபேர் காயமடைந்தன.

புலிகளின் எதிர்த்தாக்குதலைத்தொடர்ந்து முகாம் திரும்பிய இராணுவத்தினர் முகாமிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மேற்படி திடீர் தாக்குதல் சம்பவத்தில் வெளியேவர முயன்ற இராணுவத்தினர் நிலைகுலைந்து சிதறி ஓடி மீண்டும் முகாமை அடைந்தனர். (ஒ-எ)

## இன்றைய நிதர்சனம் நிகழ்ச்சிகள்

மாலை

| | |
|---|---|
| 19 00 | ஆரம்பம் |
| 19 05 | கல்லறைப் பூக்கள் |
| 19.30 | செய்தித் தொகுப்பு |
| 19.40 | பசு வளர்ப்போம் |
| 20-00 | முத்து விதானம் |
| 20 25 | அரச பயங்கரவாதம் |
| 20.45 | குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்ப |
| 21.20 | நிறைவு |

## கிரிக்கெட் ஆட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில், நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த வருடாந்தக் கிரிக்கெட் போட்டி பின்போடப்பட்டுள்ளது.

மேற்படி போட்டி எதிர்வரும் 13-ம், 14-ம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென இவ்விரு கல்லூரிகளின் நிர்வாகம் தெரிவித்துள்ளன. (வி)

## மாவைகந்தன் ஆலயம் புனருத்தாரனம்

யாழ்ப்பாணம், சனி

பலாலி முகாம் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதத்துக்குள் ான. சரித்திரப்பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் சேதமடைந்த பகுதிகள் சில தற்போது திருத்தப்பட்டு வருகின்றன.

இந்த "ஷெல்" தாக்குதலை அடுத்து ஆலயத்தின் நித்திய பூசைகள் யாவும் மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதும் நேற்று வெள்ளிக்கிழமை பக்தர்கள் மாவைக் கந்தனை தரிசித்து வந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. (வா)

## மரண அறிவித்தல்

### முருகேசு நாகராசா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வீமன்காமத்தில் வசித்தவருமான முருகேசு நாகராஜா கடந்த வெள்ளிக்கிழமை 27 - 3 - 87-ல் சுவிற்சலாந்தில் காலமானுர். இவர் முருகேசு அன்னம்மாவின் மூத்த புதல்வரும் பத்மலீலாவின் அன்புக்கணவரும் ஜெரஞ்சினி, பாஸ்கர், சுதாகர், தர்மினி திபாகர் ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. மு. ஜெகராஜா, திருமதி சி. ஜீவரட்ணம், திருமதி ப. ராஜேஸ்வரி. சாந்தினிதேவி ரஞ்சன் ஆகியோரின் சகோதருமாவார். அன்னரது ஈமக்கிரிகைகள் 4- 4- 87 இன்று சுவிற்சலாந்தில் நடைபெறும் உற்ருர், உறவினர், நண்பர்களுக்கு இத்தகவலை அறியத்தருகின்றேம்.

தகவல்: தாய், மனைவி, பிள்ளைகள், மைத்துனர்.

(சி-8892)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389 — 24126.